புதுச்சேரி அரசு

மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகம்

*****

எண்:1401/மாஅ./வஅ/டி2/பாபொதே/2024 புதுச்சேரி, 16-03-2024

செய்திக் குறிப்பு

பாராளுமன்ற தேர்தல் 2024 அறிவிப்பினை தொடர்ந்து தேர்தல் நன்னடத்தை விதிகள் 16.03.2024 முதல் புதுச்சேரியில் அமலுக்கு கொண்டு வந்துள்ளது மேலும், நேர்மையான மற்றும் சுமுகமான தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்யும் பொருட்டு, மாவட்ட நிர்வாகம் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, சுவர்விளம்பரம், போஸ்டர்கள் அல்லது பேனர்கள், கட்அவுட்டுகள் போன்றவற்றை, பொது மற்றும் தனியார் கட்டிடங்கள், சொத்துகள், வாகனங்கள், அரங்குகள்/கூடங்கள், போன்ற பொதுப்பார்வைக்கு உட்பட்ட இடங்களில், வைத்து புதுச்சேரியின் அழகினை கெடுக்காமல் பாதுகாத்திட வேண்டி இந்த மாவட்ட தேர்தல் நிர்வாகம், நகராட்சி, கொம்யூன் பஞ்சாயத்து, பொதுபணித்துறை மற்றும் மின்சாரம் ஆகிய துறைகளுடன் இணைந்து தீவிரமாக பணியாற்றி வருகிறது. மேலும் மேற்கூறிய சுவர்விளம்பரம், போஸ்டர்கள் அல்லது பேனர்கள், கட்அவுட்டுகள் போன்றவைகளை பொது இடங்களில் வைப்பது என்பது தேர்தல் நன்னடத்தை படியும், புதுச்சேரி திறந்தவெளி (அழகின் சிதைவைத் தடுத்தல்) சட்டம்–2010ன் படியும் தண்டனைக்குரிய குற்றமாகும்.

எனவே, மேற்கூறிய விளம்பரங்கள் செய்வது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளதால், சுவர்விளம்பரம், போஸ்டர்கள் அல்லது பேனர்கள் கட்டவுட்டுகள் புதியதாக வைக்கவும், மற்றும் வாகனங்களில் அனுமதி இல்லாமல் கட்சி கொடிகள், விளம்பரங்கள் போன்றவைகள் வைக்கவும் தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் உள்ளபோது, வாகனங்களில் அரசியல் சம்பந்தமான கொடிகள், ஸ்டிக்கர்கள், படங்கள், விளம்பரங்கள் போன்றவைகளை உபயோகப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் இருந்து முன் அனுமதி பெற வேண்டும். பொதுமக்கள், வேட்பாளர்கள், அரசியல் கட்சியினர் மாவட்ட தேர்தல் துறையின் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

DISTRICT ELECTION OFFICER * PUDUCHERRY *

குலோத்துங்கன்.அ, இ.ஆ.ப
மாவட்ட தேர்தல் அதிகாரி
மற்றும்
மாவட்ட ஆட்சியர்